**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்கரன்கோவில்,**

**முன்னிலை : திருமதி.M.அலிமா, B.A.,L.L.M.,**
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 07 ஆம் நாள் சனிக்கிழமை

**இடைநிலை மனு எண்.09/2026**

**IN**

**அசல் வழக்கு எண்.343/2015**

1. அன்னத்தாய்
2. ராமாத்தாள்
3. மகாராஜன்
4. வள்ளித்தாய் ....மனுதாரர்கள்/ 1, 2, 3 மற்றும் 6 பிரதிவாதிகள்

/எதிர்/

1. செல்வராஜ் ...1ம் எதிர்மனுதாரர்/வாதி
2. கனித்தாய் (எ) கனியம்மாள் ....2ம் எதிர்மனுதாரர்/7ம் பிரதிவாதி

இம்மனுவானது 25.02.2026 தேதியன்று இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்கள்/1, 2, 3 மற்றும் 6 பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.தமிழசரன் அவர்கள் ஆஜராகியும், 1ம் எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.V.கிளாஸ்டின் அவர்கள் ஆஜராகியும், 2ம் எதிர்மனுதாரர்/7ம் பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.S.S.பிரதாப்ராஜ் அவர்கள் ஆஜராகியும், மனு, எதிருரைகள் மற்றும் அசல் வழக்கு கோப்பினை பரிசீலனை செய்தும், இருதரப்பு வாத உரையை கேட்டறிந்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையின் கீழ் இருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**உத்தரவு**

மனுதாரர்களால் இம்மனுவானது உரிமையியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 151–ன் கீழ், அசல் வழக்கில் இந்நீதிமன்றத்தில் 3ம் பிரதிவாதி தரப்பு பி.வா.சா.2 ஆக முதல்நிலை சாட்சியம் அளித்துள்ள பனவடலிசத்திரம்,

ALIMA M Digitally signed by ALIMA M Date: 2026.03.07 17:46:27 +0530

கீழநீலிதநல்லூர், ஆயாள்பட்டி, தெற்குத்தெரு, கதவு எண்.8/170 ல் வசித்து வரும் லேட்.சுப்பையா குமாரர் ராமர் என்பவரின் முதல்நிலை சாட்சியத்தை Struck Off செய்து உத்தரவிடக்கோரி இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>1) மனுதாரர்கள்/1, 2, 3 மற்றும் 6 பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவின் சுருக்கம்:-</u>**

இம்மனுவின் 3ம் மனுதாரர் அசல் வழக்கில் 3ம் பிரதிவாதி என்றும், 1வது எதிர்மனுதாரர் பிராது தபசில் சொத்தில் இரண்டில் ஒரு பங்கு பாகத்தை நயமிதம் பார்த்து, தரம் பார்த்து பிரித்து பிரிந்த பாகத்தை இந்த எதிர்மனுதாரர் வசம் தனித்து சுவாதீனம் கொடுக்ககோரி மேற்படி அசல் வழக்கை மனுதாரர்களுக்கு எதிராக இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார் என்றும், மேற்படி அசல் வழக்கில் மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் மூலம் ஆஜராகி கட்சி செய்து வருவதாகவும், இந்நிலையில் 1வது எதிர்மனுதாரர் தரப்பில் சாட்சிகள் விசாரணை செய்து முடிக்கப்பட்டு, மனுதாரர்கள் தரப்பில் சாட்சிகள் விசாரணையில் 3ம் மனுதாரரை எதிர்மனுதாரர் தரப்பிலும், 7ம் பிரதிவாதி தரப்பிலும் குறுக்கு விசாரணை செய்யப்பட்டு, மனுதாரர்கள் ஊரைச் சேர்ந்த லேட்.சுப்பையா குமாரர் ராமர் என்பவர் 03.02.2026 ல் 3ம் பிரதிவாதி தரப்பு பி.வா.சா.2 ஆக முதல் விசாரணை செய்யப்பட்டுள்ளார் என்றும், அன்றைய தினம் எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் 3ம் பிரதிவாதி தரப்பு பி.வா.சா.2 ஐ குறுக்கு விசாரணை செய்ய கால அவகாசம் கோரியதன்பேரில் இந்நீதிமன்றம் 10.02.2026 ல் வாய்தா போடப்பட்டுள்ளது என்றும், இந்நிலையில் 3ம் பிரதிவாதி தரப்பு பி.வா.சா.2 சாட்சியான ராமர் என்பவருக்கு திடீரென உடல்நிலை சரியில்லாத காரணத்தால் அவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார் என்றும், மேலும் அவருடைய வயது முதிர்வினாலும், உடல்நிலை சரியில்லாத காரணத்தினாலும் 3ம் பிரதிவாதி தரப்பு பி.வா.சா.2 ஐ இந்நீதிமன்றத்தில் குறுக்கு விசாரணைக்கு ஆஜராகி சாட்சியம் அளிக்க இயலாத நிலையில் உள்ளதால் அசல் மனுவில் மனுதாரர்கள் கூடுதல் தரப்பு சாட்சியாக வேறு நபரை விசாரணை செய்ய வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது என்றும், ஆகையால், அசல் வழக்கில்

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2026.03.07 17:46:34 +0530

இந்நீதிமன்றத்தில் 3ம் பிரதிவாதி தரப்பு பி.வா.சா.2 ஆக முதல்நிலை சாட்சியம் அளித்துள்ள பனவடலிசத்திரம், கீழநீலிதநல்லூர், ஆயாள்பட்டி, தெற்குத்தெரு, கதவு எண்.8/170ல் வசித்து வரும் லேட்.சுப்பையா குமாரர் ராமர் என்பவரின் முதல்நிலை சாட்சியத்தை Struck Off செய்து உத்தரவிடக்கோரி இம்மனு மனுதாரர்கள் தரப்பில் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **<u>1ம் எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம்</u> :–**

மனுதாரர்களின் மனு சட்டப்படியும், நியாயப்படியும் செல்லக்கூடியதில்லை என்றும், 3ம் மனுதாரர் 1ம் எதிர்மனுதாரரின் வழக்கினை காலம்கடத்த வேண்டுமென்ற கெட்ட எண்ணத்தில் செயல்பட்டு வருகிறார் என்றும், எனவே மனுதாரரின் மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) **<u>2ம் எதிர்மனுதாரர்/7ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம்</u> :–**

மனுதாரர்களின் மனு சட்டப்படியும், நியாயப்படியும் செல்லக்கூடியதில்லை என்றும், மனுதாரர்கள் பி.வா.சா.2 சாட்சிக்கு வயதின் காரணமாக உடல் சரியில்லை என்று கூறியுள்ளது உண்மையில்லை என்றும், இவ்வழக்கில் 1ம் எதிர்மனுதாரருக்கு நல்லகட்சி இல்லை என்பதை தெரிந்துகொண்டு 1ம் எதிர்மனுதாரர் மனுதாரர்களுடன் கூட்டு சேர்ந்துகொண்டு வழக்கு விசாரணையை காலம்கடத்த வேண்டுமென்ற கெட்ட எண்ணத்தில் இந்த தப்பு மனுவை தாக்கல் செய்துள்ளார்கள் என்றும், எனவே மனுதாரரின் மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4) **<u>தீர்வுக்குரிய பிரச்சனை:-</u>**

இம்மனுவானது அனுமதிக்கப்படத்தக்கதா? என்பதேயாகும்.

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2026.03.07 17:46:40 +0530

5) மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனு, 1, 2 எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரைகள், அசல் வழக்கு கோப்பு மற்றும் இருதரப்பு வாதஉரை ஆகியவைகள் பரிசீலனை செய்யப்பட்டன.

6) மனுதாரர்களால் இம்மனுவானது, அசல் வழக்கில் இந்நீதிமன்றத்தில் 3ம் பிரதிவாதி தரப்பு பி.வா.சா.2 ஆக முதல்நிலை சாட்சியம் அளித்துள்ள பனவடலிசத்திரம், கீழநீலிதநல்லூர், ஆயாள்பட்டி, தெற்குத்தெரு, கதவு எண்.8/170ல் வசித்து வரும் லேட்.சுப்பையா குமாரர் ராமர் என்பவரின் முதல்நிலை சாட்சியத்தை Struck Off செய்து உத்தரவிடக்கோரி இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

7) அசல் வழக்கு கோப்பினை பரிசீலிக்கும்போது, அசல் வழக்கானது பாகப்பிரிவினை பரிகாரம் கோரியும், இதர பரிகாரங்கள் கோரியும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

8) மனுதாரர்கள் தரப்பில் பி.வா.சா.2 சாட்சியான ராமர் என்பவருக்கு திடீரென உடல்நிலை சரியில்லாத காரணத்தால் அவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார் என்றும், மேலும் அவருடைய வயது முதிர்வினாலும், உடல்நிலை சரியில்லாத காரணத்தினாலும் 3ம் பிரதிவாதி தரப்பு பி.வா.சா.2ஐ இந்நீதிமன்றத்தில் குறுக்கு விசாரணைக்கு ஆஜராகி சாட்சியம் அளிக்க இயலாத நிலையில் இருப்பதாக இம்மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், மேற்படி சங்கதியை நிரூபணம் செய்யும் வகையில் எவ்வித சாட்சிய, சான்றாவணங்களும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை.

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2026.03.07 17:46:47 +0530

9) இருப்பினும், 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் இம்மனுவிற்கு எதிருரை தாக்கல் செய்யப்பட்டபோதிலும், விசாரணையின்போது Allowed and terms என கற்றறிந்த 1ம் எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞரால் மேற்குறிப்பு செய்யப்பட்டுள்ளது.

10) எனவே, மேற்கண்ட பரிசீலனையிலிருந்து, பி.வா.சா.2 ஆன ராமர் என்பவருக்கு உடல்நலக்குறைவு ஏற்பட்டு இருப்பதாக தெரிவித்திருப்பதாலும், 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் இம்மனுவில் செலவுத்தொகையுடன் அனுமதிப்பதில் ஆட்சேபணை இல்லை என தெரிவித்திருப்பதாலும், பி.வா.சா.2ன் முதல்நிலை சாட்சியத்தை Struck Off செய்து உத்தரவிடக் கோரி தாக்கல் செய்யப்பட்ட இம்மனுவானது நீதியின் நலன் கருதி நிபந்தனை செலவுத்தொகையுடன் அனுமதிக்கப்படத்தக்கது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

11) <u>**இறுதியாக:-**</u>

இம்மனுவானது ரூ.1000/- (ரூபாய் ஆயிரம் மட்டும்) நிபந்தனை செலவுத் தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது. மனுதாரர்கள் மேற்படி தொகையினை 1வது எதிர்மனுதாரர்/வாதிக்கு ரூ.500/-ம், 2வது எதிர்மனுதாரர்/7ம் பிரதிவாதிக்கு ரூ.500/-ம் (மொத்தம் ரூ.1000/-) நேரடியாக 11.03.2026ம் தேதிக்குள் செலுத்த வேண்டுமெனவும், தவறும் பட்சத்தில் இம்மனுவானது தள்ளுபடி செய்யப்படும் என்றும் உத்தரவிடப்படுகிறது. மீண்டும் அழைக்க 11.03.2026.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம்

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2026.03.07 17:46:54 +0530

செய்யப்பட்டு, 2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 07 ம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2026.03.07 17:47:00 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

**<u>இருதரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u> :–**

– இல்லை –

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2026.03.07 17:47:05 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

மு.மா.உ. நீதிமன்றம்,
சங்கரன்கோவில்,

I.A.No.09/2026
in
O.S.No.343/2015
உத்தரவு (Draft / Fair)

நாள் : 07.03.2026